***கவனிக்க.-*** *21.06.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1817 - 2013 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2013.06.28

*1817 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# *பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 878 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 881 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.-*** (i) *கே.டீ.எம். சந்திரா பண்டார சமுதாய சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *அக்குரனை ஜாமீ ஆ ரஹ்மானியா அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகம் (கூட்டிணைத்தல் ) சட்டமூலம் 2013 மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறை நிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூலை மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவுக்கமைவாக பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

| கம்பனியின் பெயர் | பீவீ இலக்கம் | கூட்டிணைக்கப் பட்ட திகதி | பதிவு அலுவலகம் |
|---|---|---|---|
| விஸ்கி பொய்ன்ட்-சர்ப் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 92841 | 03.06.2013 | இல. 129/1, ஸ்ரீ சரணங்கார வீதி, தெஹிவளை |
| பேபர் மூன் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 92919 | 06.06.2013 | இல. 129/1, ஸ்ரீ சரணங்கார வீதி, தெஹிவளை |
| இகோ பிரென்ட்லி வுட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 92867 | 05.06.2013 | இல. 10/1, வில்லியன் அவெனியூ, கல்கிசை |

பினான்சியெல் அன்ட் பிசினெஸ்
அசோசியேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

தொலைபேசி இல. : 7452060-1.

6-824

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : அடேக்னியா சஸ்டெனபல் டிவலொப்மென்ட்ஸ் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 92859
திகதி : 04.06.2013
பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம் : இல. 172, ஹல்ஸ்டோர்ப் வீதி, கொழும்பு 12

சீ. மத்தீவ் அன்ட் கம்பனி
(பிறைவேட்) கம்பனி
எஸ்ஈசீ/(2) 2013/311.

6-674

## வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தலை இத்தால் தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : சமர் சீசன் ரெசிடென்சீஸ் எல்ரீடீ
கம்பனியின் இலக்கம் : பீபி 5123
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2013.06.10
பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி : 27 ஆம் மட்டம், கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 01

சமர் சீசன் ரெசிடென்சீஸ் எல்ரீடீ என்ற
கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பீ. டபிள்யு. கோப்பரேட் செக்ரட்டேரியல் (பீவீரீ) எல்ரீடீ,
கம்பனி செயலாளர்கள்.

2013.06.14

6-807

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் இலங்கையர்களான அனைவரும் அறிந்துகொள்ளும் பொருட்டு வெளிப்படுத்திக்கொள்வது என்னவெனில் அம்பலாங்கொடை, ஹெப்புமுல்லை ஆர். ஈ. த சில்வா மாவத்தை, 37/1ஏ ஆம் இலக்கத்தில் வதியும் றுவன்புர கல்யாணி ஹரிஸ்சந்திர த சில்வா ஆகிய நான் அம்பலாங்கொடை, ஹெப்புமுல்லை ஆர். ஈ. த சில்வா மாவத்தை, 37/1ஏ ஆம் இலக்கத்தில் வதியும் றுவன்புர சுசன்த ஹரிஸ் சந்திரவுக்கு வழங்கப்பட்டுள்ள 2011.06.29 ஆந் திகதி க்ளோரியா எஸ். சவ்தொவ் சைப்பிரஸ் நிகோஸியாவில் சட்ட உத்தியோகத்தரினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட அற்றோணி தத்துவம் அற்றோணி தத்துவப் புத்தகத்தின் 30 ஆம் தொகுதியில் 31 ஆம் பக்கத்தில் 1621 ஆம் நாள் ஏட்டில் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதெனவும் கூறப்பட்ட அற்றோணி தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றதெனவும் அறிவித்துக் கொள்கிறேன். ஆகையால் இதற்குப் பின்னர் மேற்கூறப்பட்ட றுவன்புர சுசன்த ஹரிஸ் சந்திரவினால் எனது சார்பாக மற்றும் எனது பெயரில் செய்யப்படும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் வகை கூற மாட்டேன் என இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

றுவன்புர கல்யாணி ஹரிஸ்சந்திர த சில்வா.

6-814

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் நிவ் நைல் புரொடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் 2009.12.22 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

பதிவிலக்கம் : பீவீ 70456
பதிவு முகவரி : இல. பி/105, அவிசாவளை வீதி, கலிகமுவ

எஸ். கே. ஷமிந்த செனவிரத்ன,
பதிவுசெய்த செயலாளர்.

6-809

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கம்பனியாக மாற்றப்பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : மொனார்ச் கொன்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 92743
பதிவுத் திகதி : 28, மே 2013
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 109, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு 10

விதான கமஹே கருணாசேன,
கம்பனி செயலாளர்.

இல. 12/3, நெளும் மாவத்தை (ஹரமானிஸ் வீதி),
அத்திடிய,
தெஹிவளை.

6-693

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கிறிக் சிலோன் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 92329
கூட்டிணைப்புத் திகதி : 2013, மே 20
பதிவு முகவரி : 9/1, கேர்ணல் ரீ. ஜீ. ஜயவர்தன மாவத்தை, கொழும்பு 03

பீ. டபிள்யு. கோர்ப்பரேட் செக்ரடேரியல்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்.

6-692

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : உர்பானிஸ்மா இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 92664
பதிவு முகவரி : இல. 50/2பி, ரம்பாட் சதுக்கம், ரம்பாட் வீதி, எத்துல்கோட்டே
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 22.05.2013

கம்பனி செயலாளர்.

6-671

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைவாக பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பழைய பெயர் : சீபீ லொஜிஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 71937
கம்பனி பதிவு முகவரி : இல. 17, 2 ஆம் மாடி, டீல் பிளேஸ், கொழும்பு 03
கம்பனியின் பதிவு முகவரி : காகோ-பாட்னர் லொஜிஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

காகோ-பாட்னர் லொஜிஸ்டிக்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட் சார்பில் அவர்களுக்காக,

ஜேசீ அன்ட் கம்பனி,
கம்பனி செயலாளர்கள்.

6-632

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : புக்மார்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 92505
கூட்டிணைப்புத் திகதி : 2013.05.14
பதிவு முகவரி : இல. 651/25, எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05

கம்பனி செயலாளர்.

6-641

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பகிரங்கமாக பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

நிறுவனம் கூட்டிணைக்கப்பட்ட திகதி : 23.04.2013
கம்பனியின் பெயர் : ஸ்பெஷலிஸ்ட் நொலெட்ஜ் சென்டர் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 92073
பதிவுசெய்த முகவரி : இல. 20, போதிராஜ மாவத்தை, ஜயந்திபுர, பத்தரமுல்லை

6-744

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பெயர் மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

கிரீடன்ஸ் ஜெனோமிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் முன்பு கிரீடன்ஸ் ஹேல்த் (பிறைவேட்) லிமிட்டெட்
(கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 78459)

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி கிரீடன்ஸ் ஹேல்த் (பிறைவேட்) லிமிட்டெட் (முன்னைய பெயர்) என்ற அதன் பெயரை கிரீடன்ஸ் ஜெனோமிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (புதிய பெயர்) என 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 4 ஆந் திகதி (கம்பனி பதிவு இலக்கம் பீவீ 78459) இன்கீழ் தன் பெயரை மாற்றம் செய்துள்ளது என்பதையும் இக்கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இல. 31/1, ராஜகீய மாவத்தை, கொழும்பு 7 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

சரவணன் நீலகண்டன்,
தலைவர்,
எம் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செக்ரட்டறீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனியின் கம்பனி செயலாளர்கள்.

எம் அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 03.

6-752

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் வ/ப பொறுப்புள்ள கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சிலோன் ஜப்பான் சிக்குயிரிட்டீஸ் (பீவீரீ) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 92476
கூட்டிணைப்புத் திகதி : 2013, மே 10
பதிவு முகவரி : மட்டம் 06, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 01

கம்பனி செயலாளர்.

6-756

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பீஎஸ் என்ஜினியரிங் சேர்விசெஸ் (பீவீரீ) எல்ரீடீ
பதிவு இலக்கம் : பீவீ 84079
கூட்டிணைப்புத் திகதி : 02.02.2012
பதிவு முகவரி : இல. 9/45, மூன்றாம் ஒழுங்கை, வுட்லன்ட் அவெனியூ, கொஹுவலை, நுகேகொடை

6-800

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : மஹாமெகா பப்ளிஷர்ஸ்
பதிவு இலக்கம் : ஜீஏ 2623
கூட்டிணைப்புத் திகதி : 11.10.2011
பதிவு முகவரி : மஹாமெகா புத்திஸ்ட் மொனெஸ்டரி, வடுவாவ, யட்டிகலொலுவ, பொல்கஹவலை

இல. 371/2, 1/1, நீர்கொழும்பு றோட்,
வெலிசறை.
எஸ்ஈசீ/(2)/2001/95.

6-799

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சொலசிஸ் கன்சல்ட்டிங் (பீவீரீ) எல்ரீடீ
பதிவிலக்கம் : பீவீ 86149
கூட்டிணைப்புத் திகதி : 01.06.2012
பதிவு முகவரி : இல. 9/45, மூன்றாம் ஒழுங்கை, வுட்லண்ட் அவெனியூ, கொஹுவலை, நுகேகொடை

கெஸ்ட்மென் கோர்ப்பரேட் கன்சல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

6-798

# ஏல விற்பனைகள்

## செலான் வங்கி பீஎல்சீ – நுகேகொட கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*('கடன்பட்டோர்' என்ற வகையில் ஹெவா கட்டுவன்டேனியாகே ஜானக என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

### சொத்து ஏல விற்பனை

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் மகரகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பன்னிப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள ''தெல்கஹாவத்த'' என்று அழைக்கப்படுகின்ற வரிமதிப்பீட்டு இலக்கம் 20, அரவ்வல வீதியில் உள்ள காணி கட்டிடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள், மணல் மற்றும் அங்குள்ள அனைத்துடனும் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஏ பி. இன்ரலால் சொய்சா என்பவரால் தயாரிக்கப்பட்டு 08.09.1997 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 189/97 இல் துண்டு 1 என அடையாளமிடப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள காணி, பதினாறு தசம் ஏழு எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 16.78பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

**கீழ் விபரிக்கப்பட்ட காணி பொது விதிக்கமைய உரிய முறையில் அதன் மீதும் அதனூடாகவும்,**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் மகரகம நகரசபை எல்லைக்குட்பட்ட பன்னிப்பிட்டிய வட்டாரம் 8 இல் அமைந்துள்ள ''தெல்கஹாவத்த'' என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதி பெற்ற நிலஅளவையாளர் டி. ஏ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்டு 18.02.1967 இல் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 397 இல் துண்டு 5 என அடையாளமிடப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள காணி பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

மேலே விவரிக்கப்பட்ட காணியை 2013, யூலை 16 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- மகரகம மத்திய நகரத்திலிருந்து ஹைலெவல் வீதி மார்க்கமாக சுமார் 1.6 கி. மீ. தூரத்தில் உள்ள ரொஸலீன் அக்காவின் கடை சந்திவரை சென்று வலதுபுறமாகத் திரும்பி எரவல வீதியால் 250 மீ. வரை சென்று வலதுபுறமாக மீண்டும் திரும்பி 15 அடி அகலமான மோட்டார் வாகனம் செல்லும் தார் வீதியால் சுமார் 50 மீற்றர் வரை சென்றால் குறிக்கப்பட்ட சொத்தை அடையலாம்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 18.12.2009 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 21.11.2009 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'', ''லங்காதீப'' மற்றும் 18.12.2009 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகையையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%), (2) உள்ளூர் விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கும் மற்றைய அரசாங்க அல்லது உள்ளூர் அதிகார சபை வரி விதிகளுக்கு அமைய ஒரு வீதம் (1%) உள்ளூர் விற்பனை வரியாக செலுத்தப்பட வேண்டும். (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %), (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500, (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை ''சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., சிலிங்கோ செலான் கோபுரம், இல. 90, காலி வீதி, கொழும்பு 3'' என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2456482, 2456487.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்,
மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவை.
தொலைபேசி : 011-3068185, 2572940.

6-754

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

### சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை

கணக்கு இல. 0040 5900 0549 - எம். டபிள்யூ. எம். பீ. என். பி. குலதுங்க

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2009.02.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.07.16

ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2010.07.07 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே ஐந்து இலட்சத்து நாற்பதாயிரத்து எழுநூற்றறுபத்துநான்கு ரூபா பதினான்கு சதம் (ரூ. 1,05,40,764.14) 2008, திசெம்பர் 31 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும்வரை தொண்ணூற்றுமூன்று இலட்சத்து அறுபத்தையாயிரத்து ஏழு ரூபா எண்பத்தைந்து சதம் (ரூ. 93,65,007.85) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று தசம் இரண்டு ஐந்து வீதம் (13.25%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான சொக்மன் அன்ட் சமரவிக்ரம மூலமாக 2013.07.17 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளேயின் பல்லேபத்துவின் கடுவெலை பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹோகந்தரையில் அமைந்த "வெல்கிரிய எஸ்ட்டேட்" என்றழைக்கப் படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. ரீ. மாதொல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, பெப்புருவரி 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 2003/44 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 67 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : லொட் 73 மற்றும் 70 ; கிழக்கிற்கு : லொட்கள் 70, 66 மற்றும் 64 ; தெற்கிற்கு : லொட்கள் 66, 64 மற்றும் 63 ; மற்றும் மேற்கிற்கு : லொட்கள் 63 மற்றும் 73. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2003/44 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகம காணிப்பதிவ கத்தில் பரிமாணம்/பக்கம் G 1601/26 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்டதன் மீது மற்றும் அதன் ஊடாக பிரவேசிக்கும் மார்க்க உரிமைகளுடனானது.

இல. 2003/44 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 70 (20 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்).

இல. 2003/44 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 49 (20 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்).

இல. 2003/44 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 62 (20 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

6-803

---

**கொழும்பு மாவட்ட நீதிமன்றம்**

ஏலவிற்பனை அறிவித்தல்

ராஜகிரிய, ராஜகிரிய வீதி, இல. 224 இல் வதியும் நிலந்தி கொன்றட் பெட்றிக் டி சில்வா கருணாசிறி

............................... வழக்காளி

வழக்கு இல. : 18928/பி

எதிர்

1. ராஜகிரிய, ராஜகிரிய வீதி, இல. 228 இல் வதியும் களுபோவிலகே றெஜினோல்ட் ரத்னசிறி பெரேரா

................................ 1 ஆவது எதிராளி

2. களுபோவிலகே பியர்சன் பத்மசிறி பெரேரா

................................ 1ஏ எதிராளி

மற்றும்

நீதிமன்ற இழவுபடுத்துதல் சம்பந்தமாக குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் எல் எக்ஸ் பந்தியின் கீழ்வரும் விடயம் சம்பந்தமாக

ராஜகிரிய, ராஜகிரிய வீதி, இல. 224 இல் வதியும் நிலந்தி கொன்றட் பெட்றிக் டி சில்வா கருணாசிறி

........................ வழக்காளி மனுதாரர்

களுபோவிலகே பியர்சன் பத்மசிறி பெரேரா

........................ 1ஏ எதிராளி

சிறிய காணியுடன் சேர்ந்த வீடொன்று 2013 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு காணியுள்ள இடத்தில் வைத்து என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஆதன இடாப்பு

கே. பி. விஜேவீர, அனுமதிபெற்ற நிலஅளவையாளரால் 2001.05.01 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வரைபடம் 1879 ஆம் படத்தில் ஏ என காட்டப்படும் ஒரு துண்டுக் காணி (ஏ. எப். சமீர், அனுமதிபெற்ற நிலஅளவையாளர் 1979.10.22 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 2224 ஆம் இலக்க படத்தில் 3 ஆவது எனக் காட்டப்படும் ஒரு துண்டுக் காணி). இதன் வரி இலக்கம் 228 என்ற கஹட்டகஹவத்த என்று அழைக்கப்படும் மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரலே பல்லே பத்துவ கோட்டை நகர சபை எல்லையில் ராஜகிரிய, வெலிக்கடை வீதியில் அமைந்துள்ள 2.75 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட காணி.

**காணிக்குச் செல்லும் வழி**.- கொழும்பு புறக்கோட்டையிலிருந்து ராஜகிரிய சந்திக்கு வந்து வலதுகை வழியில் திரும்பி ராஜகிரிய வீதி ஊடாக 1/4 கிலோ மீட்டர் கடந்து சென்ற பின் வீதி சந்தியைக் கடந்த பின் 50 மீட்டர் தொலைவில் இருக்கும் வலதுகைப் பக்க காணி.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- ஏலத்தின் முடிவில் பின்வரும் தொகைகள் அதே தினம் அதே இடத்தில் வெற்றிகரமான கேள்விதாரரால் ஏலதாரருக்கு ரொக்கமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 25%, (2) ஏலதாரரின் கட்டணம் 2 1/2, (3) எழுதுவினைஞரினதும் அழைப்போனினதும் கட்டணம், (4) நொத்தாரிசுவின் கட்டணம் ரூபா 4,500, விளம்பரச் செலவுகள், மீதி 75% ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மத்துகாமம் மாவட்ட நீதிமன்றத்தில் மேற்படி இலக்க வழக்கின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- .......................................... ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் .............................................. ஆந் திகதிய ''தினமின'', ''டெயிலி நியூஸ்'', ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

சிறியாணி மனம்பேரி,
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்,
விலைமதிப்பீட்டாளர்.

இல. 09, பெல்மொன்ட் வீதி,
கொழும்பு 12.

6-825

---

## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

கட்டிடங்களுடனான காணியொன்றை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

ஏசியா எசட் பினான்ஸ் லிமிட்டெட் (இதற்கு முன்னர் பினான்ஸ் அன்ட் லேன்ட் சேல்ஸ் லிமிட்டெட் என அழைக்கப்பட்ட) இல. 36, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08

................................ வழக்காளி.

வழக்கு இல. : 17849/எம். பி.

எதிராக

ராஜபக்ஷ ரன்கிர பதிரணகே மாரியன் ரொஷானி பெரேரா, ஆர். என்டர்பிரைசஸ், இல. 38, ஹேகித்த குறுக்குத் தெரு, ஹெந்தளை, வத்தளை

.............................. எதிராளி.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் மேற்குறித்த இலக்க வழக்கினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள விற்பனை அதிகாரப்பத்திரத்தின் பிரகாரம் மேற்குறித்த எதிராளியிடமிருந்து வழக்காளிக்கு அறவீடு செய்துகொள்வதற்குள்ள 23,34,239 ரூபாவாகிய தொகையொன்றையும், அத்தொகையின் மீது 2007.01.30 ஆந் திகதி தொடக்கம் தீர்வைத் திகதி வரையிலும் அதன் பின்னர் தீர்வையில் குறிப்பிட்டுள்ள முழுத்தொகையின் மீது அத்தொகையைச் செலுத்தி முடித்துக்கொள்ளும் வரை ஆண்டொன்றுக்கு 22 வீதமாகிய வட்டியையும், மாதமொன்றுக்கு 4.5% வீதமாகிய தண்டனை வட்டியையும் செலுத்துவதற்காகவும் கட்டளையிட்டு அப்பணத்தொகையை அறவீடு செய்துகொள்வதற்காக இதன்கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள விஸ்தீரணத்தில் 46 ஏக்கர் 1 றூட் 31 பேர்ச்சஸ் விசாலமான காணி மற்றும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யுமாறு எனக்கு கட்டளை செய்யப்பட்டுள்ளதனால் மாத்தளை-தம்புள்ளை வீதியில் நாஉல கரவிலஹேன வீதி மறுபெயர் உடஹாதுவ கிராமத்தின் ஆதனம் அமைந்துள்ள இடத்தில் 2013, யூலை மாதம் 24 ஆந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகிறது.

**ஆதனத்தை வந்தடைதல்**.- மாத்தளை-தம்புள்ளை வீதியில் தம்புள்ளை நோக்கிச் செல்லும்போது நாஉல நகரத்தைக் கடந்து சிறிது தூரம் சென்று வலது பக்கத்திலுள்ள கரவிலஹேன வீதி மறுபெயர் ஹாதுவ வீதியில் சுமார் 3 கிலோ மீற்றர் சென்று ஹாதுவ உப அஞ்சல் அலுவலகத்தைக் கடந்து சிறிது தூரம் செல்லும்போது வலது பக்கத்தில் உள்ள கிரவல் பாதையில் ஒரு மீற்றர் சென்றதும் வலதுபக்கத்தில் அதே பாதைக்கு எதிரே இவ்வாதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- ஏலவிற்பனை முடிந்தவுடன் பின்வரும் தொகைகளை வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் ஏலவிற்பனையாளராகிய என்னிடம் செலுத்தப்படுதல் வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாக அல்லது வங்கி வரைவாக மாத்திரமே செய்யப்பட வேண்டுமென்பதுடன், காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(1) கொள்முதல் விலையில் நூற்றுக்கு இருபத்தைந்து (25%) ரூபா தொகையொன்று. மீதி நூற்றுக்கு எழுபத்தைந்து (75%) ஏலவிற்பனைத் திகதி தொடக்கம் முப்பது (30) நாட்களுக்குள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் மேற்குறித்த வழக்கில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும் ;

(2) ஏல விற்பனை பகிரங்கப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல், பத்திரிகை அறிவித்தல்கள் ஆகிய ஏல விற்பனை பகிரங்கப்படுத்தப்பட்ட செலவுகளும், விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தும் சட்டத்தரணி கட்டணங்கள் உட்பட எல்லா பிரசார செலவுகளும் ;

(3) ஏல விற்பனையாளரின் தரகுத் தொகை நூற்றுக்கு இரண்டரை (2 1/2%) ;

(4) நாஉல பிரதேச சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய கொள்முதல் விலையில் 1% ஆகிய வர்த்தக வரி ;

(5) இலிகிதர் மற்றும் கூவுநர் கட்டணங்கள்.

இவ்வாதனம் 1,68,38,900 ரூபாவுக்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏலத்தில் விலை கூறல் வைத்து வேண்டுவதற்கு எதிர்பார்க்கும் கொள்வனவாளர்கள் மேற்குறித்த 25% ஆகிய தொகைக்காக ஆகக் குறைந்தது 42,00,000 ரூபாவாகிய வங்கி வரைவொன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் பதிவாளரின் பெயரில் எழுதி ஏல விற்பனைத் திகதியில் ஏல விற்பனையை ஆரம்பிப்பதற்கு முன்னர் என்னிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்பவர்களுக்கு மாத்திரமே ஏல விற்பனையில் விலை கூறல் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

### அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், வடக்கு வகபனஹ உடசியபற்று நாஉல பிரதேச சபை எல்லையினுள் உடஹாதுவயில்

அமைந்துள்ள வலவ்வே ஹாதுவ காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். இராஜசேகரன் என்பவரால் அளந்து தயார்செய்யப்பட்ட 5338 ஆம் இலக்க 2001.03.31 ஆந் திகதிய வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 1 ஆம் இலக்க ஆதனத்திற்கு எல்லைகள்- வடக்கே : நாஉலவில் இருந்து ஹாதுவ வரை செல்லும் வீதியும் ; கிழக்கே : கால்வாய் ஒன்றுக்காக ஒதுக்கப்பட்ட பகுதி மற்றும் கருணாரத்னவுக்குச் சொந்தமான காணியும் ; தெற்கே : கால்வாய் ஒன்றுக்காக ஒதுக்கப்பட்ட பகுதியும் ; மேற்கே : அக்காணியின் மிகுதிப் பகுதியும் ஆகிய எல்லைகளினுள் அமைந்துள்ள ஏழு ஏக்கர் மூன்று றூட் இருபத்தொரு பேர்ச்சஸ் (7ஏ. 3றூ. 21பே.) விசாலமான காணியும் அங்குள்ள பயிர்ச்செய்கைக்கு மற்றும் அனைத்தும் அடங்கலாக. இக்காணி மாத்தளை காணிப்பதிவகத்தில் டீ 452/83 ஆம் இலக்க இருமடித்தாளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை வகபனஹ உடசியபற்று நாஉல பிரதேச சபை எல்லையினுள் உடஹாதுவயில் அமைந்துள்ள வலவ்வே ஹாதுவ காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். இராஜசேகரன் என்பவரால் அளந்து தயார்செய்யப்பட்ட 5338 ஆம் இலக்க 2001.03.31 ஆந் திகதிய வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 2 ஆம் இலக்க ஆதனத்திற்கு எல்லைகள்- வடக்கே : கால்வாய் ஒன்றுக்காக ஒதுக்கப்பட்ட பகுதியும் ; கிழக்கே : கால்வாய் ஒன்றுக்காக ஒதுக்கப்பட்ட பகுதியும் ; தெற்கே : கால்வாய் ஒன்றுக்காக ஒதுக்கப்பட்ட பகுதியும் ; மேற்கே : பல்லே ஹாதுவ கிராமமும் ஆகிய எல்லைகளினுள் அமைந்துள்ள முப்பத்தெட்டு ஏக்கர் நான்கு பேர்ச்சஸ் (38ஏ. 0றூ. 4பே.) விசாலமான காணியும் அங்குள்ள பயிர்ச்செய்கைக்கு மற்றும் அனைத்தும் அடங்கலாக. இக்காணி மாத்தளை காணிப்பதிவகத்தில் டீ 452/84 ஆம் இலக்க இருமடித்தாளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை வடக்கு வகபனஹ உடசியபற்று நாஉல பிரதேச சபை எல்லையினுள் உடஹாதுவயில் அமைந்துள்ள வலவ்வே ஹாதுவ காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். இராஜசேகரன் என்பவரால் அளந்து தயார்செய்யப்பட்ட 5338 ஆம் இலக்க 2001.03.31 ஆந் திகதிய வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 3 ஆம் இலக்க ஆதனத்திற்கு எல்லைகள்- வடக்கே : கால்வாய் ஒன்றுக்காக ஒதுக்கப்பட்ட பகுதியும் ; கிழக்கே மற்றும் தெற்கே : கால்வாயும் ; மேற்கே : பல்லே ஹாதுவ கிராமமும் ஆகிய எல்லைகளினுள் அமைந்துள்ள இரண்டு றூட் ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 2றூ. 6பே.) விசாலமான காணியும் அங்குள்ள பயிர்ச்செய்கைக்கு மற்றும் அனைத்தும் அடங்கலாக. இக்காணி மாத்தளை காணிப்பதிவகத்தில் டீ 452/ 85 ஆம் இலக்க இருமடித்தாளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**மேலதிக விபரங்களுக்காக**.- சிரேட்ட கடன் அறவீட்டு அலுவலர், ஏசியா எசட் பினான்ஸ் லிமிட்டெட், தொலைபேசி இல. : 077-7322409.

என். ஜே. எதிரிசிங்க,
தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்,
நீதிமன்ற ஆணையாளர்,
ஏல விற்பனையாளர், மதிப்பீட்டாளர்.

இல. 244, பழைய கொட்டாவ வீதி,
எம்புல்தெனிய,
நுகேகொடை,
தொலைபேசி இல. : 077-7453463.

6-759

### தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை பற்றிய அறிவித்தல்

**பரப்பளவில் 15 பேர்ச்சுக்களில் 421/59 ஆம் வரிமதிப்பீட்டிலக்கதைக் கொண்ட பெறுமதிவாய்ந்த காணியும் வளவுகளும் ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள கொழும்பு மாநகர சபையின் நிருவாக எல்லைகளினுள் 24 ஆம் வட்டாரத்தில் (சுதுவெல்ல) அமைந்துள்ளதும், டார்லி வீதியில் 421/60 ஆம் பழைய வரிமதிப்பீட்டிலக்கத்தையும் ரீ. பி. ஜயா மாவத்தையில் 421/59 ஆம் புதிய வரிமதிப்பீட்டிலக்கத்தையும் கொண்டதாய் அதன் மீதுள்ள கட்டிடங்களுடன் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஆர். டயஸ் அபயகுணவர்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2002, ஏப்பிறல் 2 ஆந் திகதிய 4066 ஆம் இலக்க வரைபடத்தில் கோங்கஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்.**

**மின்சாரம், நீர் மற்றும் தொலைத்தொடர்புச் சாதனங்களுடனும் வேறு அசைவுள்ள எந்திரத் தொகுதி/பொறித்தொகுதி என்பவற்றுடனும் மேலேயுள்ள காணித்துண்டுடன் இப்போது பொருத்தப்பட்டுள்ள அல்லது நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் காலத்துக்குக்காலம் பொருத்தப்படக்கூடிய அல்லது நிரந்தரமாக இணைக்கப்படக்கூடிய அசைவுள்ள பொறித்தொகுதி, இணைப்புக்கள், பொருத்திகள் மற்றும் சேவைகள் எல்லாவற்றுடனும் ஒவ்வொன்றுடனும் சேர்த்து.**

கஹலவத்ததே கம்ஹல என்ற பெயர் மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் தொழில் கொண்டு நடாத்துவோரும், இலங்கைத் தேயிலைச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டோரும், கொழும்பு 05 ஐச் சேர்ந்தோருமான மீரா ஷாஹிப் மொஹமட் றொசாயிஸ் மற்றும் அலீபியா மொஹமட் றொசாயிஸ் என்போர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பில் 2008, நவெம்பர் 4 ஆந் திகதிய 752 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனராதலால், சொல்லப்பட்ட வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 2013, யூலை 19 ஆம் நாளன்று மு. ப. 10.30 மணிக்கு ஸ்தலத்தில் வைத்து மேலேயுள்ள ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்வேன்.

**மேலதிக விபரங்களுக்காக**.- 2013.05.31 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியையும், 2013.05.13 ஆந் திகதிய "ஜலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**வளவுகளுக்கான அணுகுவழி**.- நகரசபை மண்டபச் சந்தியிலிருந்து ஏறத்தாழ 300 மீற்றர் தூரம் யூனியன் பிளேஸ் வழியாக (டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை) ஹைட் பார்க் சந்தி வரை சென்று ரீ. பி. ஜயா மாவத்தைக்கு வலது பக்கமாகத் திரும்பவும். வினயலங்கார மாவத்தையைக் கடந்து ஏறத்தாழ 300 மீற்றர் தூரம் செல்லவும். எக்செல் வேர்ல்ட்டுக்கு நேரெதிராக 10-15 அடி அகலமான வீதி வழிக்கு வலது பக்கமாகத் திரும்பி ஏறத்தாழ 356 மீற்றர் தூரம் செல்லவும். ஏறத்தாழ

50 மீற்றர் தூரத்தில் விடயப் பொருளாகவுள்ள ஆதனத்துக்கு இட்டுச் செல்கின்ற 12 அடி அகலமான கொங்கிறீட்டுப் பதிக்கப்பட்ட வீதி வழியினுள் இறுதியாகப் பிரவேசிக்கவும்.

**கொடுப்பனவுகளைச் செய்யும் முறை**.- ஏல விற்பனை முடிவுற்றதன் மேல் கொள்வனையாளராக வரவுள்ளவர் பின்வரும் பணத்தைச் செலுத்துதல் வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 10%, (2) உள்ளூரதிகார சபை விதிப்பனவுகளும் அவற்றின் மீதான சேர்பெறுமதி வரியும், (3) 2 1/2 ஏலவிற்பனையாளரின் விதிப்பனவுகள், (4) விளம்பரக் கட்டணங்களின் முழுச் செலவும், (5) எழுதுவினைஞரினதும் கூவுநரினதும் கட்டணமான ரூபா 1,500, விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தியமைக்காக நொத்தாரிசுவின் கட்டணமான ரூபா 3,000 முதலியன. கொள்வனவு விலையின் மீதி 90% ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்துறுதிகளையும் ஏனைய ஆவணங்களையும் பார்வையிடுவதற் காக, கொழும்பு 02, நவம் மாவத்தை, 40 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, சட்ட அறவீடுகள் முகாமையாளருடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. : 2448448, 011-7448448.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளரும்
பெறுமான மதிப்பீட்டாளரும்,
பட்டயம்பெற்ற ஏலவிற்பனையாளரும்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 077-7672082 ;
தொலைநகல் இல. : 2871184.

6-749

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.